# MINVELI MEDIA WORKS

# கிருஷ்ணவேணி பஞ்சாலை

பஞ்சாலைத் தொழிலாளர்களின் சுவாரசியமான உலகத்தைப் பதிவு செய்யும் ‘கிருஷ்ணவேணி பஞ்சாலை’ திரைப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்தது.

1957 முதல் 1990-கள் வரையிலான கோவை, உடுமலை வட்டார மில் தொழிலாளர்களின் வாழ்க்கையே இத்திரைப்படம். பஞ்சாலைகளை பின்னணியாக வைத்து ஓர் அழகான காதல் கதை சொல்லப்பட்டிருக்கிறது. கேண்டீன் நேர சுவாரசிய பேச்சுகள், அனல் பறக்கும் கேட் கூட்டம், குடும்பங்களாக செல்லும் சுற்றுலா, தொழிற்சாலைக் குடியிருப்புகளில் உருவாகும் நட்பு என்று மற்றவர்களுக்கு வாய்க்காத சுவாரசியமான உலகங்களைக் கொண்டது மில் தொழிலாளர்களின் வாழ்க்கை. இன்றைய சாஃப்ட்வேர் இளைஞர்கள், யுவதிகளின் வாழ்க்கைமுறை எப்படி மற்றவர்களால் ஆர்வத்தோடு பார்க்கப்படுகிறதோ, அப்படி 1970களிலும் 80களிலும் இருந்தது மில் தொழிலாளர்களின் வாழ்க்கை. அந்த வாழ்க்கையின் சந்தோஷங்களையும் வலிகளையும் பதிவு செய்யும் படமே ‘கிருஷ்ணவேணி பஞ்சாலை’.

‘கிருஷ்ணவேணி பஞ்சாலை’யின் நாயகனாக ஹேமச்சந்திரனும், நாயகியாக நந்தனாவும் நடிக்கிறார்கள். நந்தனாவிற்கு இது முதல் படம். மில் முதலாளியாக ராஜீவ் கிருஷ்ணா, சூப்பர்வைசராக சண்முகராஜா, யூனியன் தலைவராக எழுத்தாளர் அஜயன் பாலா, அம்மா வேடத்தில் ரேணுகா, மற்றும் பாலாசிங், தென்னவன், பூவிதா, ஹேமலதா ஆகியோர் நடிக்கிறார்கள். பாலுமகேந்திராவின் உதவியாளர் சுரேஷ் பார்கவ் ஒளிப்பதிவு செய்ய, ‘தென்மேற்கு பருவக்காற்று’ படத்திற்கு இசை அமைத்த என்.ஆர்.ரஹ்நந்தன் இசையமைக்கிறார். வைரமுத்து பாடல்களை எழுதுகிறார். மு.காசிவிஸ்வநாதன் படத்தொகுப்பை கவனிக்கிறார்.

மின்வெளி மீடியா ஒர்க்ஸ் தயாரிக்கும் ‘கிருஷ்ணவேணி பஞ்சாலை’யை எழுதி இயக்குகிறார் தனபால் பத்மநாபன். படத்தின் இணை தயாரிப்பு ‘சக்தி மசாலா’ டாக்டர் சாந்தி துரைசாமி மற்றும் ‘மாஃபா’ க.பாண்டியராஜன்.

சுவாரசியமான கதைக்களம், ரசனையான காட்சிப்பதிவுகள், மென்மையான காதல், இயல்பான நகைச்சுவை என்று ரசிகர்களின் இன்றைய எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. இயல்பான திரைப்படங்களை ஆதரிக்கும் சினிமா ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இப்படத்தின் இசை விரைவில் வெளியாக உள்ளது.

PRO. Nikhil

No.9, 74th Street, 12th Sector, KK Nagar, Chennai – 600078.
Ph: 044 42135901, 42135902, 42135903
Email: sudha@minveli.com www.minveli.com